## டிசம்பர் - 21

**பாத்திரவான் யார்? - வெளி 5 : 2.**

மிகவும் அன்புக்குரியவர்களே, யூதாக் கோத்திரத்துச் சிங்கமான, நம்முடைய நித்தியானந்தமுள்ள கர்த்தராகிய இயேசுவால் நமக்காக முத்திரை உடைக்கப்பட்ட அவருடைய ஏற்பாட்டின் புஸ்தகத்தை கவனித்துப்பார்க்க நம்மை தகுதியுள்ளவர்களாக இவ்வளவிற்கு தேவன் எண்ணியிருக்கிறார் என்பதை நாம் தெளிவாக அறிந்துக் கொள்ளும்போது, அதைத் தொடர்ந்து கவனித்துப்பார்க்கவும் எல்லாகாரியங்களிலும் அதற்கு உண்மையுள்ள கீழ்படிதலினாலும் உண்மைப்பற்றோடும் அவருடைய நியாயப்பிரமாணத்தின் ஆச்சரியமான காரியங்களை படிக்கவும் நமது தகுதியை நிருபிப்போமாக, தெய்வீக சத்தியத்தின் வெளிச்சத்தை பிரதிபலிக்கிற ஆசீர்வாதமான ஊழியத்தில் ஏதோ கொஞ்சம் பங்கை உடையவர்களாக இருக்கத் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுவதிலுள்ள நம்முடைய பெருமையான சிலாக்கியத்தை நாம் குறைவாக மதிப்பிடாமலிருப்போமாக. சத்தியத்தின் வெளிச்சத்தை மனப்பூர்வமாகப் பெற்று அழகாக மற்றவர்களுக்கு கடத்திக் கொண்டும் நம்மேல் வருவதற்கு தேவன் அனுமதிக்கும் மிகக் கடுமையான துன்பத்தை உண்மையோடும் சகித்துக்கொண்டும் நம்மை நாமே மிக அரிதான மதிப்புள்ள நகைகள் என்றும், உண்மையான வைரங்கள் என்றும் நிரூபிப்போமாக. ஏனென்றால், இந்தச்சிறு காரியங்களில் நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், வல்லமையிலும் மிகுந்த மகிமையிலும், கிறிஸ்துவோடு இருக்கவும் குறித்த காலத்தில் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுவோம்.

- Z ’02, 333 (R 3103).

நம்முடைய மூலவாக்கியத்தின் கேள்வி, தேவனுடைய ஏற்பாட்டை விளக்குகிறவராவதற்கும், நிறைவேற்றுகிறவராவதற்கும் தகுதியுள்ளவர் யார் என்கிற சந்தர்ப்பத்திலுள்ளது. இந்தக் கேள்வியை கேட்ட பலமுள்ள தூதன், தேவனுடைய ஏற்பாட்டை விளக்குகிறவராவதற்கும் நிறைவேற்றுகிறவராவதற்கும் யூதயுகத்தில் ஒருவரையும் தகுதியுள்ளாவராகக் கண்டிராத நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைக்கு அடையாளமாக இருந்தான். அந்த யுகத்திலும், இந்த யுகத்திலுமுள்ள தேவனுக்கு பயந்த ஜனங்கள் நியாயப்பிரமாணத்தால் நிருபிக்கப்பட்ட மானிட குடும்பத்தின் பாவ நிலையை குறித்து துக்கமடைந்தார்கள். உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவுக்குள்ளும், அவரினாலும் இயங்குகிற ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகிய இவைகள் மூலமாக நமக்காக ஒரு ஜீவனின் ஊற்றை ஏற்படுத்தியிருக்கிற நம்முடைய தேவனுடைய கிருபைக்கு ஸ்தோத்திரம். தேவனுடைய ஜனங்களின் நடுவிலுள்ள அந்த பலமுள்ள ஒருவர் நீதியின் எல்லா கட்டளைகளையும் பூரணமாக அனுபவித்து, ஆதாமும் அவனுடைய குலமும் அடைந்த அதன் தண்டனையை அனுபவித்து அதனால் உரிமையுடன் கேட்கப்படுகிற எல்லாவற்றையும் நிறைவேற்றினதுமல்லாமல் பலியின் எல்லா சந்தர்ப்பத்தையும் முற்றிலுமாக திருப்தியாக்கி அன்பின் எல்லா யோசனைகளையும் முற்றிலுமாக நிறைவேற்றியிருக்கிறார். அவரே பாத்திரவானாயிருக்கிறார். ஆம் அவர் முற்றிலும் அழகுள்ளவர்.

- P ’33, 177.

**ஒத்த வாக்கியங்கள் :-**

வெளி 5:6,9-14; சங் 45:2; ஏசா 11:5; 53:9; மீகா 5:4; மத் 12:41,42; 27:3,4; லூக் 3:16; 23:41; யோவா 1:14; 5:30,34,41; 7:18; அப் 13:28; 1கொரி 1:24; 2கொரி 4:4; 5:21; கொலோ 1:19; 2தீமோ 2:13.

**கோபுர வாசிப்பு** : Z ’16, 252 (R 5943).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் கிறிஸ்து எனக்கு என்னவாக இருந்தார்? எப்படி? பலன்கள் எவை?